13.12.19 பாலாஜி

அ.வ.எண்.33/11

குறுக்கு விசாரணை தொடர்ச்சி—

4வது அயிட்டமாக சர்வே எண்.328/2பி என்று வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் விஸ்தீரணம் 9 சென்ட் என்றால் சரிதான். ஆனால் ஏ4 ஆவணத்தில் 11.5 ஏர்ஸ் என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏ4 ஆவணத்தில் என் சிறிய பாட்டனார்கள் அனற்தபத்மநாயுடு மற்றும் சேஷாச்சலம் ஆகியோர்களின் பெயர்கள் வருகிறது என்றால் சரிதான். மேற்படி 2 சிறிய பாட்டனார்களுககும் அந்த சொத்தில் பாத்தியம் உண்டா என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. என் பாட்டனார் எழுதி வைத்த உயில் சாசனத்தின்படி 4வது அயிட்டம் 2, 3 பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்டது என்றால் அது குறித்து என் தகப்பனார் என்னிடம் எதுவும் தெரிவிக்கவில்லை. 5வது அயிட்ட சொத்து சர்வே எண்.226/4 யார் கிரயம் வாங்கிய சொத்து என்று எனக்கு தெரியாது. 5வது அயிட்டத்தில் குறிப்பிட்டுள்ள சொத்திற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த 5வது அயிட்ட சொத்து என் பாட்டனார் எழுதிய உயில்படி 3வது பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் தவறு. ஏ.1 ஆவணப்படி சர்வே எண்.226/4 3வது பிரதிவாதி பெயரில் பட்டா வருகிறது என்று சொன்னால் சரிதான். 5வது அயிட்ட சொத்து பொறுத்து உத்திரமேரூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அவ எண்.37/2011 வழக்கு 3வது பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 5வது அயிட்ட சொத்து 3வது பிரதிவாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றாலும் அதில் எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் தவறு. 6வது அயிட்ட சொத்து சர்வே எண்.101/4 யார் கிரயம் வாங்கிய சொத்து என்று எனக்கு தெரியாது. 6வது அயிட்ட சொத்து என் சிறிய பாட்டனார் அனந்தபத்மநாயுடு கிரயம் வாங்கிய சொத்து என்றால்

அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சொத்து உயிலின் படி என் பாட்டி லட்சுமிபாய்க்கு ஒதுக்கப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 6வது அயிட்ட சொத்து ஏ.1 ஆவணப்படி என் பாட்டி லட்சுமிபாய் பெயரில் தான் பட்டா வருகிறது என்றால் சரிதான். 6வது அயிட்ட சொத்து என் பாட்டி லட்சுமிபாயின் தனிப்பட்ட சொத்து என்றாலும் அதில் எனக்கு பாகம் கிடையாது என்றாலும் சரியல்ல. 6வதுஅ யிட்ட சொத்து என் பாட்டி லட்சுமிபாய் 2, 3 மற்றும் 9 பிரதிவாதிகளுக்கு செட்டில்மென்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தற்போதைய பட்டா படி 6வது அயிட்ட சொத்து 2, 3 மற்றும் 9 பிரதிவாதிகளின் பெயரில் தான் பட்டா இருக்கிறது அந்த விவரம் உங்களுக்கு நன்றாக தெரியும், அதனால் தான் அந்த பட்டாவை நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஏ.1 ஆவணப்படி 7வது அயிட்ட சொத்து சர்வே எண்.104/2பி என் பாட்டி லட்சுமிபாய்க்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். 7வது அயிட்ட சொத்து எங்கள் கூட்டு அனுபவத்தில் உள்ளது என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உயிலின் படி என் பாட்டி லட்சுமிபாய்க்கு கிடைத்த 7வது அயிட்ட சொத்தை 9வது பிரதிவாதிக்கு செட்டில்மென்ட் எழுதி வைத்து அவர் பெயரில் தான் பட்டா உள்ளது என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. இந்த வவிரங்கள் உங்களுக்கு நன்றாக தெரியும், இந்த வழக்கிற்காக அதை வேண்டுமென்றே மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. 8வது அயிட்ட சொத்தான சர்வே எண்.108/1 என் பாட்டி லட்சுமிபாய் பெயரில் பட்டா வருகிறது என்றால் சரிதான். உயிலின் படி அவருக்கு கிடைக்கப்பெற்ற சொத்து என்பதால் தான் பட்டா அவர் பெயரில் வருகிறது என்று சொன்னால் தவறு. விவசாய கடனிற்காக பாட்டி பெயரில் பட்டா மாற்றப்பட்டதாக என் தகப்பனார் என்னிடம் சொன்னார். இந்த விவரமும் உங்களுக்கு நன்றாக தெரியும் என்றாலும் வழக்கறிககாக வேண்டுமென்றே மறைத்து பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 8வது அயிட்ட சொத்து பொறுத்து 2, 3 பிரதிவாதிகளுக்கு செட்டில்மென்ட் எழுதி கொடுத்து அவர்கள் பெயரில் தான் பட்டா வருகிறது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 9வது அயிட்ட சொத்து சர்வே எண்.327/5 யார் கிரயம் வாங்கியது என்றால் தெரியாது. அந்த சொத்திற்கான பட்டா என் தகப்பனார் பெயரில் வருகிறது. அந்த பட்டாவை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கூட்டுக்குடும்ப வருமானத்தை வைத்து என் தகப்பனார் பெயரில் 1982ல் கிரயம் பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்தும் உயிலின் படி உங்களின் தகப்பனார், திருமூர்த்தி ராவ், சிவராாமன் ஆகிய மூவருக்கும் ஒதுக்கப்பட்ட சொத்து என்று சொன்னால் அது குறித்து என் தகப்பனார் எதுவும் என்னிடம் சொல்லவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஏ.3 சிட்டாவில் என் தகப்பனார், திருமூர்த்தி ராவ், சிவராமன் ஆகியோர் பெயர்கள் வருகிறது என்றால் சரிதான். என் வழக்குரையில் சர்வே எண்.327/5 ன் விஸ்தீரணம் 17 சென்ட் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். ஏ.3 அடிங்கலில் அதன் விஸ்தீரணம் 19.5 ஏர்ஸ் என்று வருகிறது என்றால் சரிதான். 10வது அயிட்ட சொஒது சர்வே எண்.330/3 யார் பெயரில் பட்டா வருகிறது என்று என்னால் சொல்ல முடியாது. அதன் விஸ்தீரணத்தை வழக்குரையில் 18 சென்ட் என்று காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். ஏ.3 சிட்டாவில் 10 நபர்கள் பெயரில் கூட்டு பட்டாவாக வருகிறது என்றால் சரிதான். அதன் விஸ்தீரணம் 32 ஏர்ஸ் என்று வருகிறது என்றால் சரிதான். 11வது அயிட்ட சொத்து சர்வே எண்.330/2 யாருடைய சொத்து என்று என்னால் சொல்லமுடியாது. சர்வே எண்.330/2ற்கான ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை. 12வது அயிட்ட சொத்து சர்வே எண்.327/9பி யார் கிரயம் பெற்ற சொத்து என்று எனக்கு தெரியாது. ஏ.2 அடங்கல் 2வது பிரதிவாதி பெயரில் வருகிறது என்றால் சரிதான். அந்த சொத்தை பொறுத்தவரையில் கூட்டு அனுபவத்தை காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல்

செய்யவில்லை. மேலும் அந்த சொத்து 2வது பிரதிவாதி கிரயம் வாங்கிய சொத்து என்றால் எனக்கு தெரியாது. என் வழக்குரையில் 12வது அயிட்ட சொத்தின் விஸ்தீரணம் 2.5 ஏர்ஸ் என்று காண்பித்துள்ளேன். ஆனால் நான் தாக்கல் செய்துள்ள ஏ.2 அடங்கலில் 3 ஏர்ஸ் என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 13வதுஅயிட்ட சொத்து சர்வே எண்.233/2ஏ2 யார் கிரயம் பெற்ற சொத்து என்ற விவரம் எனக்கு தெரியாது. அநத சொத்திற்கான பட்டா யார்பெயரில் வருகிறது என்ற விவரம் தெரியாது. 13வது அயிட்டம் என் பாட்டனாரின் உயிலின் படி 2வது பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் அதுபோல் ஒன்றுமில்லை. 16வது அயிட்ட சொத்து சர்வே எண்.237/4பி யார் கிரயம் பெற்றது மேலும் யார் பெயரில் பட்டா உள்ளது என்றும் எனக்கு தெரியாது. அந்த சொத்து உயிலின் படி 2, 3 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட ்சொத்து என்றால் எனக்கு தெரியாது. ஏ.2 ஆவணத்தின் படி 2,3 பிரதிவாதிகள் பெயரில் தான் பட்டா வருகிறது என்றால் சரிதான். 15வது அயிட்ட சொந்து சர்வே எண்.233/2ஏ/6பி யார் கிரயம் பெற்றது மேலும் யார் பெயரில் பட்டா உள்ளது என்றும் எனக்கு தெரியாது. அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 17வது அயிட்ட சொத்து சர்வே எண்.238/4 யார் கிரயம் பெற்றது மேலும் யார் பெயரில் பட்டா உள்ளது என்றும் எனக்கு தெரியாது. 18வதுஅயிட்ட சொத்து சர்வே எண்.210/2 என்ற சொத்தை பொறுத்து ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை. அந்த ்சொத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் எந்தவிதமான சம்மந்தமில்லை வேறு யாருடைய சொத்தையோ இந்த வழக்கில் சேர்த்துள்ளீர் என்றால் சரியல்ல. 19வது அயிட்ட சொத்து சர்வே எண்.213/2 ன் விஸ்தீரணம் 18 சென்ட் என்று வழக்குரையில் கூறியுள்ளேன். ஆனால் ஏ.4 அடங்கலில் சர்வே எண்.213/2 56.5 ஏர்ஸ் என்று வருகிறது என்றால் சரிதான். அந்த சொத்து தற்போது சர்வே எண்.213/2ஏ, 213/2பி என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது அந்த விவரத்தை கூட இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் உட்பிரிவானதே எனக்கு தெரியாது. அந்த ்சொத்து

என் சிறிய பாட்டனார் அனந்தபத்மநாயுடுவிற்கு சொந்தமானது என்றால் எனக்கு தெரியாது. 20வது அயிட்ட சொத்து சாவே எண்.212/2ஏ யார் கிரயம் பெற்றது மேலும் யார் பெயரில் பட்டா உள்ளது என்றும் எனக்கு தெரியாது. இந்த சொத்து உயிலின் படி 10வது பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் தெரியாது. 21வது அயிட்ட சொத்து சர்வே எண்.416/3 சொத்திற்கும் அந்த `சொத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் எந்தவிதமான சம்மந்தமில்லை வேறு யாருடைய சொத்தையோ இந்த வழக்கில் சேர்த்துள்ளீர் என்றால் சரியல்ல. 22வது அயிட்ட சொத்து சர்வே எண்.440/1ன் விஸ்தீரணம் 73 சென்ட் என்று வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அதன் மொத்த விஸ்தீரணம் 50 சென்ட் தான் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த சொத்துஉயிலின் படி 3வதுத பிரதிவாதி நீலகண்டன் பெயரில் பட்டா வருகிறது என்று தெரிந்ததால் தான் அந்த பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)